1978 மார்ச் 15]

22—3—1978 (புதன்கிழமை)	நீதி மற்றும் சிறைச்சாலை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
23—3—1978 (வியாழக்கிழமை) (பிற்பகல்)	1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.
	1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.
24—3—1978 (வெள்ளிக்கிழமை)	தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை.
25—3—1978 (சனிக்கிழமை)	தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
26—3—1978 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
27—3—1978 (திங்கட்கிழமை)	1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையின் மீதும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.
28—3—1978 (செவ்வாய்க்கிழமை)	மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் மீது விவாதம்.
29—3—1978 (புதன்கிழமை)	உணவு மற்றும் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
30—3—1978 (வியாழக்கிழமை)	நிதி சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
31—3—1978 (வெள்ளிக்கிழமை)	முற்பகல்: இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம். பிற்பகல்: பிரிவு உபசார உரை.

(முற்பகல் 11-10)

4. 82-வது விதியின்படி விவர அறிக்கை.

(1) பெரியார்—அண்ணா நினைவகம் குறித்து

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க நான் விழைகிறேன்.

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 15

1978-79 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் போது பெரியார்-அண்ணா நினைவகம் பற்றி 28—2—1978 அன்று திரு. என். வீராசாமி சில கருத்துக்களை வெளியிட்டார். அது தொடர்பாக நிலைமையை விளக்கி கீழ்க்காணும் தகவல்களை அளிக்க முன்வருகிறேன்.

1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி அன்று பெரியார்-அண்ணா நினைவகத்திற்குப் பார்வையிடச் சென்றிருந்த கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு. கோ. தமிழரசு என்பவர் 'பார்வையாளர் புத்தகத்தில்' சில கருத்துக்களை எழுதியிருந்தார். நினைவகத்தைக் கவனித்துக்கொள்ள அங்குப் பொறுப்பானவர்கள் எவரும் இல்லை என்றும், இரண்டு சிறுவர்கள் அன்றாட சம்பள தற்காலிக அடிப்படையில் (என். எம். ஆர்) 2—1—1978 ஆம் நாளிலிருந்துதான் அங்குப் பணியாற்றிவருவதாகவும் அவர்களில் ஒரு பையனாகிய திரு. விஜயன் என்பவன் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஈரோடு பிரிவின் உதவிப் பொறியாளர், ஈரோடு கிழக்கு துணைக் கோட்டத்தின் உதவி நிருவாகப் பொறியாளர் ஆகியோரின் கண்காணிப்பில் பெரியார்-அண்ணா நினைவகம் இருந்து வருவதாகவும், பார்வையாளர் குறிப்பிட்டிருப்பது போல விஜயன் என்ற பெயரில் எவரும் அங்கு நியமிக்கப்படவில்லை என்றும் பொதுப்பணித் துறை (கட்டிடங்கள்) முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளரும், தலைமைப் பொறியாளரும் இதுபற்றி விசாரித்து அறிவித்துள்ளனர். பார்வையாளர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கருத்துக்களை உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வராததற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தும் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது என்றும் விளக்கங்களைப் பெற்றதன் பேரில் அலுவலர்களின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக்களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) 1974-75 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை குறித்து.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கையின் படிகளைக் குறித்து திரு. என். வீராசாமி சில கருத்துக்களை 28—2—1978 ஆம் நாளன்று தெரிவித்தார்.